மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au





## ஆண்டு 6

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# என் ஆசான்

இங்கு நடுநிலை வகிக்க வந்திருக்கும் நடுவர்களே, மற்றும் வீற்றிருக்கும் சபையோர்களே, உங்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள். நான் இங்கு பேச எடுத்துக்கொண்ட தலைப்பு என் ஆசான்.

உலகுக்கு எங்களைக் காட்டி மகிழ்ச்சி அடைபவள் எமது தாய். ஆனால், உலகையே எங்களுக்குக் காட்டி எம்மை பெருமைப்பட வைப்பவர்கள் எமது ஆசான்கள்.

“மாதா, பிதா, குரு, தெய்வம்“ எனுந் தொடரில் எமது பெற்றோருக்கு அடுத்த படியில் இருப்பவர்கள் ஆசான்கள்தானே!

கரும்பாறையாய் இருந்த எங்களை, அறிவு எனும் உளிகொண்டு அழகுச் சிலையாக்கி வடிவமைத்து, ஏணியாய் நின்று எங்களை உயர்த்தியும், எங்களின் திறன் யாதென அறிந்து, எங்கள் பலவீனத்தை பலமாக்கி வைப்பவர்கள் எங்கள் ஆசான்களே.

பாலர் வகுப்பு தொடக்கம் நாங்கள் பல்கலைக்கழகப் பட்டம் பெறும்வரை எங்களோடு கூடவே வருபவர்கள். எமது முயற்சிக்குப் பக்க பலமாய் இருந்து, நீதிநெறி ஒழுக்கத்தைக் கற்றுத் தந்து எமக்குப் பாதைகாட்டி வழி நடத்தியவர்கள்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகவைச் சான்றோனாக்கி, அழகுபார்த்த ஆசான்களின் காலடி வணங்கி, எனது பேச்சை நிறைவு செய்கின்றேன்.

நன்றி,
வணக்கம்.



ஆக்கம்: ஆசிரியர் திரு. எல்விஸ் எமிலியானுஸ்.